# 19

# ''இயேசு தருகிற சமாதானம்''

## (யோவான் 16)

*"என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (வசனம் 33).*

இயேசு,மேல்வீட்டில் அப்போஸ்தலர்களுடனான தமது உரையாடலை, அவருக்குள் அவர்கள் சமாதானத்தை மகிழ்வுடன் அனுபவிக்க முடியும் என்ற வாக்குறுதியைக் கொண்டு முடித்தார். இதைக் குறித்து நாம் வியப்படைவதில்லை. பூமிக்குரிய அவரது வாழ்வு, அவருடைய பிறப்புடன் இணைவு கொண்டிருந்ததும் தூதர்களால் அறிவிக்கப்பட்டதுமான "நற்செய்தி," ''மிருந்த சந்தோஷம்'' மற்றும் "பூமியிலே சமாதானம்'' ஆகியவற்றைக் கொண்டு தொடங்கிற்று (லூக்கா 2:10, 14). பரலோக சேனையின் இந்த அறிவித்தலுடன் இசைவிணக்கமாகும் வகையில், இயேசு - சிலுவையின் நிழலில் கூட - திகைப்படைந்த தமது அப்போஸ்தலர்களுக்குத் தாம் கொண்டிருந்த சமாதானத்தைச் சுட்டிக்காண்பித்தார்.

அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு, தேவனு*டன்* சமாதானம் என்பதை அப்போது தந்து கொண்டிருக்கவில்லை. அதை அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்தனர், ஏனெனில் தேவனு*டன்* சமாதானம் என்பது, ஒருவர் தேவனுடன் உடன்படிக்கை உறவில் பிரவேசிக்கும்போது பெறுகிற சட்டப்பூர்வமான வகையிலான சமாதானமாக உள்ளது. அவரது இரட்சிப்பை ஏற்றுக்கொண்டதில் அவர்கள் தேவனுடைய வரவேற்புக்குப் பதில் செயல் செய்திருந்தனர் மற்றும் அவரது கோபாக்கினையின்கீழ் இருப்பதில் இருந்து அவருடன் சமாதானமாயிருக்கும் நிலைக்குக் கடந்து வந்திருந்தனர். அப்போஸ்தலர்களின் அப்போதைய நிலையில் அவர்கள், அவருடைய (தேவனுடைய) கிருபையின்கீழ் வாழ்பவர்களுக்கு "ஆக்கினைத்தீர்ப்பு இல்லை" என்பதை அறிவிக்க முடிந்திருந்தது (காண்க ரோமர் 8:1). அவர்களுக்கு முன்பாக இயேசு வைத்திருந்த சமாதானம் என்பது, இடர்ப்பாடுகள், சிரமங்கள் மற்றும் பாடுகள் ஆகியவற்றின் மத்தியில் கிடைக்கும் சமாதானமாக - அவர்கள் இந்தக் கடினமான வேளைகளை ஜெபத்தில் அவரிடம் கொண்டுவரும்போது சமாதானத்தின் தேவன் அவர்களுடையவராக இருப்பார் என்பதாக - இருந்தது. தேவனு*டன்* சமாதானமாயிருத்தல் என்பது, கிருபையினால் இரட்சிக்கப்பட்டு இருப்பவர்களுக்கு உடனடியாகவும் தொடர்ந்தும் அருளப்படுகிற சினம்தணிக்கும் சமாதானமாக உள்ளது. தேவனு*டைய* சமாதானம் என்பது, அவரது மக்கள் அவரிடம் வந்து, வாழ்வின் சூறாவளிப் புயல்களின்போது அவர் தமது பிள்ளைகளுக்கு அருளுகிற அமைதியை உரிமைகோரும்போது

அவர்களுக்கு அவர் அருளுகிற நடைமுறை சமாதானமாக உள்ளது.

இயேசு, மேல்வீட்டில் தமது உரையாடல் முழுவதிலும், வரவிருந்த கொந்தளிப்பான வேளைகள் குறித்து அப்போஸ்தலர்களை எச்சரித்திருந்தார். அவரது வார்த்தைகளில் இருந்து அவர்கள், தங்களை உலகத்தின் பொல்லாத மக்கள் வெறுப்பார்கள் (15:18-25), தங்களை உபத்திரவப்படுத்துவார்கள் (15:20) மற்றும் நீதியினிமித்தம் தங்களின் பெயர்களை அவமாக்குவார்கள் என்று அறிந்திருந்தனர். அவர்கள் மீது உலகம் கொண்டு வர இருந்த உபத்திரவம் பற்றி மீண்டும் ஒருமுறை இயேசு பேசியபோது, அவர்களின் மனங்கள் திகைப்பினால் தொடர்ந்து சுழன்றிருக்கும். இருப்பினும் அவர், "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு ..." என்று கூறியதைக் கேட்டது அவர்களுக்கு எவ்வளவு பெரிய நற்செய்தியாக இருந்திருக்க வேண்டும்!

நேர்மாறு என்பது மிகவும் தெளிவாக இருந்தது: உலகத்தில் அவர்கள் உபத்திரவத்தை எதிர்கொள்வார்கள், ஆனால் இயேசுவுக்குள் அவர்கள் சமாதானம் கொண்டிருப்பார்கள். மேல்வீட்டில் இயேசு தமது உரையாடலில், சமாதானத்தைப் பற்றிய வாக்குத்தத்தமே கடைசி செய்தியாக இருந்தது, மற்றும் அது அவர்களின் மாபெரும் ஆறுதல்களில் ஒன்றாக இருக்க வேண்டியதாயிற்று. "உங்கள் பிரச்சனைகள் மீதல்ல, என் வாக்குத்தத்தங்கள் மீதே கவனம்குவியுங்கள்" என்று அவர்களுக்கு அவர் கூறினார். அவர் தமது மிகச்சிறந்த செய்தியைக் கடைசித் தருணம் வரையில் வைத்திருந்து அறிவித்தார். அவர்கள் பெருந்துயரத்தின் ஆழங்களைச் சகித்து இடையறாத எதிர்ப்பை எதிர்கொண்டாலும்கூட, இயேசு அவர்களுடன் இருந்து அவர்களுக்கு சமாதானத்தை அருளுவார்.

அவர்களுக்கு அவர் அருள இருந்த சமாதானத்தைப் பற்றி அவர் பெரிதாக விவரித்து உரைக்காது இருந்தாலும், அவர்களின் மனங்களிலும் நமது மனங்களிலும் அதைப் பற்றிய குறிப்பான பண்புகளை நிலைநாட்டப் போதுமான அளவுக்கு அதைப் பற்றி அவர் கூறினார். இயேசுவின் சுருக்கமான வார்த்தைகளின்படி, அவரது சமாதானம் எதைப்போன்று உள்ளது?

## அவரது வசனங்கள் மூலமாக சமாதானம்

*அது அவரது வசனங்களில் நங்கூரமிடப்பட்ட சமாதானமாக உள்ளது.* நாம் இயேசுவின் வார்த்தைகளை சத்தியம் என்ற வகையில் தழுவிக்கொள்ளும்போது மாத்திரமே இயேசுவின் சமாதானம் நம்முடையதாக இருக்க முடியும். அவர் "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்று கூறினார் (16:33அ). அவர்கள் இந்த சமாதானத்தைக் கொண்டிருக்கும்படியாகவே அவர்களுக்கு அவர் இவை யாவற்றையும் கூறியிருந்தார். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தாரால் எப்படி நடத்தப்பட்டாலும், சமாதானம் கொண்டிருக்க வேண்டும் என்பது இயேசுவின் முதன்மையான அக்கறைக்குரிய விஷயங்களில் ஒன்றாக இருந்தது. முன்னதாக அவர், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று கூறியிருந்தார் (14:27).

இயேசுவின் சமாதானம் உறுதியும் நம்பகமுமானதாகவும் உண்மையானதாகவும் உள்ளது; அது ஒரு மாயையான, தெளிவற்ற கற்பிதக்

கொள்கையல்ல. அவரது போதனையானது உண்மை சமாதானத்திற்கு வழியைச் சுட்டிக்காண்பிக்கிறது மற்றும் அவரது அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படிபவர்கள் அதைப் பற்றிக்கொள்ளவும் அதைத் தழுவிக்கொள்ளவும் முடியும்.

## அவருக்குள் மாத்திரமே சமாதானம்

*இது இயேசுவுக்குள் மாத்திரம் கிடைக்கும் சமாதானமாக உள்ளது.* இயேசு, "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டு" என்று கூறியதை அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு இருந்தனர். அவர்கள் அவருக்குள் நிலைத்திருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு அவர் ஏற்கனவே காண்பித்திருந்தார்: "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (15:5). இயேசு இன்றி அவர்கள் கனிகொடுப்பவர்களாக இருக்க இயலாது, அவர் இன்றி அவர்கள் சமாதானம் கொண்டிருக்க இயலாது.

இயேசு, இருளின் அதிகாரத்தை வெற்றிகொள்வதற்காக சிலுவையை நோக்கிச் சென்று கொண்டு இருந்தார். உலகத்தின் பாவம் நிறைந்த பாராமுகமும் கொடுமையான உக்கிரமும், சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் சாதிக்கப்பட்ட வெற்றியைத் தடைசெய்ய முடியாதிருந்தன. எதிர்காலத்தில் அவருக்குள் நிலைத்திருக்கும் யாவரும், அவரது தியாகத்தின் வெற்றியில் பங்கடைவார்கள். இயேசு, கிருபையின் தமது அளிப்பை விரும்பும் யாவருக்கும் அதை அருளியிருக்கிறார், மற்றும் அவர் தமது சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் எவருக்கும் அதைத் தருவார். இந்த சமாதானம் அவரது பிரசன்னத்தில் நிலைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் - அவரது மன்னிப்பு, வல்லமை மற்றும் வாக்குத்தத்தம் என்பவற்றின் கீழ் வாழ்பவர்களுக்கு மாத்திரம் வருகிறது.

## ஒவ்வொரு சோதனையிலும் சமாதானம்

*இது ஒவ்வொரு சோதனையிலும் நம்மைத் தாங்கி வழிநடத்தும் சமாதானமாக உள்ளது.* இயேசு, "உலகத்திலே உங்களுக்கு உபத்திரம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று கூறினார். தோல்வியின் முன்னிலையில் நாம் திடன்கொள்ள முடியும், ஏனெனில் இயேசு நமக்கு மன்னிப்பை அருளி இருக்கிறார் (மத்தேயு 14:27). பயத்தின் முன்னிலையில் நாம் திடன்கொள்ள முடியும், ஏனெனில் இயேசு தமது பிரசன்னத்தை நமக்கு அருளி இருக்கிறார் (மாற்கு 6:50). அக்கினிபோன்ற உபத்திரவத்தின் முன்னிலையில் நாம் திடன்கொள்ள முடியும், ஏனெனில் இயேசு தமது சமாதானத்தை நமக்கு அருளி இருக்கிறார் (யோவான் 16:33).

இயேசு உலகத்தை - அதன் பரீட்சைகளை, அதன் மீறுதல்களை, அதன் சோதனைகளை, அதன் சோதிப்பவனை மற்றும் அதன் தற்காலிகத்தன்மையை - "வெற்றிகொண்டுள்ளார்." யோவானுடன் சேர்ந்து நாம், "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று கூற முடியும் (1 யோவான் 5:4). இயேசுவின் வெற்றியானது ஆழம் கொண்டுள்ளது, ஏனெனில் அது இந்த உலகம் நம்மீது வீசும் எதையும் மூடுகிறது. அது நீளம் கொண்டுள்ளது; ஏனெனில் நமது

பயணம் முடியும் வரையிலும் நாம் அதில் பங்கேற்க முடியும். அது அகலம் கொண்டுள்ளது, ஏனெனில் விசுவாசிக்கிற மற்றும் விசுவாசிக்கத் தொடரும் எவரொருவரும் அதைக் கொண்டிருக்க முடியும்.

## முடிவுரை

அப்போஸ்தலர்களைப் போன்று நாம், இயேசுவின் சமாதானத்தை - அவரது சத்தியத்தின் மூலமாக வருகிற, அவரது பிரசன்னத்தில் தங்கியிருக்கிற மற்றும் இந்த உலகத்தின் உபத்திரவங்கள் யாவற்றையும் வெற்றிகொள்கிற சமாதானத்தை - நாடுகிறோம். நாம் இந்த சமாதானத்தைப் பெற்று அதில் நிலைத்திருப்பது எப்படி? சமாதானத்திற்கான சாலை ரோமர் 6:3ல் மறைமுகமாகக் குறிப்பிடப் படுகிறது: அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதால் அவருக்குள் நாம் பிரவேசிக்கிறோம் (ரோமர் 6:17ஐயும் காணவும்). வெளிச்சத்தில் உண்மையுடன் நடப்பதால் நாம் அவருக்குள் நிலைத்திருக்கிறோம் (1 யோவான் 1:7), மற்றும் அதன்பின்பு நாம், நம்மைத் தாக்கும் இடர்ப்பாடுகளுடன் அவரை அணுகி அவற்றை அவரது பாதங்களில் சமர்ப்பிக்க முடியும் (பிலிப்பியர் 4:6, 7). நமது வேண்டுதல்களுக்குப் பதில் செயலாக அவர், தூதர்களின் அணியைப்போன்று தமது சமாதானத்தை அனுப்புகிறார்; அது இந்த வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கனத்த மற்றும் மிக வன்மையான புயல்களில் இருந்து நமது இருதயங்களைக் காத்துக்கொண்டு அவற்றை அமைதிப்படுத்தும். சமாதானத்தின் பிரபுவுக்குள் நாம் நிலைத்திருக்கும்போது, அவர் விலையேறப்பெற்ற தமது இரத்தத்தினால் கொண்டுவந்த சினம் தணிக்கும் சமாதானத்தைக் கொண்டும், அத்துடன் அவரது வாழ்விலும் வெற்றியிலும் நாம் பங்கேற்கையில் அன்றாடம் நம்மைச் சுற்றிச் சூழும் நடைமுறை சமாதானத்தைக் கொண்டும் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

---

*“கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” (ரோமர் 6:3).*

*“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” (பிலிப்பியர் 4:6, 7).*

*“இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்” (ரோமர் 5:1).*